
# பாராளுமன்றத் தேர்தல்
# 2020




## பாராளுமன்றத் தேர்தலை நடத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் தொடர்பான சட்டரீதியான பகுப்பாய்வு

பஃவ்ரல்

# பாராளுமன்றத் தேர்தல்

## பாராளுமன்றத் தேர்தலை நடத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் தொடர்பான சட்டரீதியான பகுப்பாய்வு


ஆக்கம்

சட்டத்தரணி தரங்க வீரசிங்க

பதிப்பு

சட்டத்தரணி ஜயந்த சந்திரசிறி



வெளியீடு

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு

(PAFFREL)

## பாராளுமன்றத் தேர்தலும் மக்களும்

இலங்கையில் நடைமுறையிலுள்ள 1978 அரசியலமைப்பின் 03ஆம் உறுப்புரைக்கு அமைய "மக்களின் இறைமை" நாட்டில் சட்டத்தை ஆக்குவதற்கான தத்துவம், அதனை நடைமுறைப்படுத்தல் மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்குரிய அதிகாரத்தை குறிக்கின்றது. நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னேற்றம் கண்ட ஜனநாயக வரம்பின்னுள் இந்த ஆட்சி அதிகாரங்கள் மக்களால் பிரயோகிக்கப்படுகின்றன என்பதே அந்த உறுப்புரையின் பொருள். அந்த வகையில் அரசியலமைப்பின் இறைமை அதிகாரத்தில் ஆட்சித்தத்துவங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை என்பன அடங்கும்.

மக்களாட்சி முறையின் தொடக்ககாலத்தில் சகல மக்களும் ஒன்றாக இணைந்து இந்த ஆட்சி அதிகாரங்களை நடைமுறைப்படுத்திய போதும் சமூகம் சிக்கலானதாக மாரியதைத் தொடர்ந்து ஜனநாயகம். அதாவது, மக்கள் சார்பில் மக்கள் கொண்டுள்ள ஆட்சி அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகவே தேர்தல் எனப்படுவது இச் செயற்பாட்டில் மக்களுக்குரிய இறைமை அதிகாரத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் முறையாக ஒப்படைப்பதாகும். அந்தவகையில் பாராளுமன்றத் தேர்தல் எனப்படுவது மக்களின் சட்டமியற்றும் அதிகாரத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கும் செயற்பாடாகும். ஜனநாயக வரம்பினுள் அரசியல் கட்சிகள், குழுக்கள் என பெரும்பாலான வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவதால் நடைமுறையில் மிகவும் பொருத்தமான பிரதிநிதி தெரிவு செய்யப்படுகின்றார்.

நாட்டினுள் ஜனநாயகமும் நல்லாட்சியும் நிலவ வேண்டுமானால் உண்மையான மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டியது இன்றியமையாததாகும். உண்மையாகவே மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்ற, மக்களின் நம்பிக்கையை வெல்லும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். உண்மையான மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டுமாயின் நடத்தப்படும் தேர்தல் சுதந்திரமானதும் நீதியானதுமாக அமைய வேண்டும். மோசடியாக தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் நடத்தப்படுகின்ற தேர்தல் ஒரு போதும் சுதந்திரம் மற்றும் நிதியானதாக அமையாது.

அந்தவகையில் இச்சிறிய நூலின் மூலம் பராளுமன்றத்திற்கான பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு ஏற்றவகையில் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலுக்கு அவசியமான சட்ட ரீதியான ஏற்பாடுகள் தொடர்பில் பரந்த அறிவினை தேர்தலுடன் தொடர்புடைய சகல தரப்புக்கும் வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு உதவியாக அமையும் என நம்புகின்றோம்.

**ரோஹண ஹெட்டிஆரச்சி**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**ப∴வ்ரல் அமைப்பு**

## இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்

பாராளுமன்றத் தேர்தல் ஒன்றில் உறுப்பினர்களை தெரிவு செய்தல் தொடர்பான நடைமுறைகள் மற்றும் தேர்தல் செயற்பாடு தொடர்பான பல சட்டங்கள் இலங்கையில் காணப்படுகின்றன.

01. 1978 அரசியலமைப்பு - 88-104 உறுப்புரை

1978 அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தம்.

02. பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம் (1981 இலக்கம் 01)

இலங்கை பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான சட்டங்கள் 1981 ஆண்டின் 01 இலக்கச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. மேலும், அக்கட்டத்தில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1988 ஆண்டின் 15 இலக்க பாராளுமன்றத் தேர்தலகள் (திருத்தச்) சட்டம்

1988 ஆண்டின் 29 இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

1988 ஆண்டின் 54 இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

1988 ஆண்டின் 35 இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

03 ஏனைய சட்ட ஏற்பாடுகள்

தண்டனைச் சட்டக்கோவை 169 அ - ஏ வரையான பிரிவுகள்

2004 ஆண்டின் 14 இலக்க தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள் சட்டம் - வாக்களிப்பதற்காக தேசிய அடையாள அட்டையை கட்டாயப்படுத்தல்.)

04 தேர்தல் ஆணையாளரினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் கட்டளைகள் சுற்றறிக்கைகள் மற்றும் வருத்தமான அறிவித்தல்கள், வழக்குத் தீர்ப்புகள்

## 01. பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான பொது ஏற்பாடுகள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புக்கு இணங்க பாராளுமன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதோடு, அதில் 196 பேர் பொதுத்தேர்தல் மூலமாகவும், மிகுதி 29 பேர் தேசியப் பட்டியல் மூலமாகவும் தெரிவு செய்யப்படுகின்றனர். அரசியலமைப்பின் X மற்றும் X1 ஆகிய அத்தியாயங்களில் பாராளுமன்ற நடவடிக்கைமுறையும், உறுப்பினர்களின் தத்துவங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. 2015இல் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின் மூலம் 1978 அரசியலமைப்புக்கு பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அதன்படி, அதுவரை காலமும் 06 ஆண்டுகளாக காணப்பட்ட பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 05 ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

### தேர்தல் நிர்வாகம்

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தினால் 03 உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அதன்படி, தேர்தல்களை நடத்துதல் மற்றும் தேர்தல்

நிர்வாக நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு மேற்கொள்ளும். தேர்தல்களை நடத்துவதற்கு ஏற்புடைய விதத்தில் வழிகாட்டு நெறிகளை தயாரிப்பதற்கு அரசியலமைப்பினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 01- தேர்தல் மாவட்டங்களுக்கு அமைவாக தெரிவு செய்யப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை.**

| தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும் | தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | நியமனப் பத்திரத்தில் உள்ளடக்க வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. கொழும்பு | 19 | 22 |
| 02. கம்பஹா | 18 | 21 |
| 03. களுத்துறை | 10 | 13 |
| 04. கண்டி | 12 | 15 |
| 05. மாத்தளை | 05 | 08 |
| 06. நுவரெலியா | 08 | 11 |
| 07. காலி | 09 | 12 |
| 08. மாத்தறை | 07 | 10 |
| 09. அம்பாந்தோட்டை | 07 | 10 |
| 10. யாழ்ப்பாணம் | 07 | 10 |
| 11. வன்னி | 06 | 09 |
| 12. மட்டக்களப்பு | 05 | 08 |
| 13. திகாமடுல்ல | 07 | 10 |
| 14. திருகோணமலை | 04 | 07 |
| 15. குருனாகல் | 15 | 18 |
| 16. புத்தளம் | 08 | 11 |
| 17. அனுராதபுரம் | 09 | 12 |
| 18. பொலனறுவை | 05 | 08 |
| 19. பதுளை | 09 | 12 |
| 20. மொணறாகலை | 06 | 09 |

| | | |
|---|---|---|
| 21. இரத்தினபுரி | 11 | 14 |
| 22. கேகாலை | 09 | 12 |

1978 அரசியலமைப்பில் விகிதாசார பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறைப்படி தெரிவு செய்யப்படுகின்றனர். உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக ஒரு நிர்வாக மாவட்டம் தேர்தல் மாவட்டம;/ தொகுதியாக கருதப்படுவதுடன் நிர்வாக மாவட்டம் ஒன்றிலிருந்து தெரிவு செய்யப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதே மாவட்டத்திலிருந்து தெரிவு செய்ய வேண்டும்.

**பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கான தகைமையீனங்கள்**

அரசியலமைப்பின் 89 மற்றும் 91(1)ஆம் உறுப்புரையில் உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கான தகைமையீனங்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன. அதன்படி, பின்வருவோர் வேட்பாளர்கள் அல்லர்.

1. இலங்கை பிரஜைகள் அல்லாதோர்.
2. பதினெட்டு வயதினை அடைந்தோர்.
3. இலங்கையில் வலுவுடையதாகவிருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனம் அற்றவரெனக் காணப்பட்டோர்.
4. இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத ஒரு காலத்திற்கான சிறைத் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய தவெறான்றுக்காக ஆறுமாதங்களுக்கு குறையாது சிறைத் தண்டனையை அனுபவித்து வருபவராயிருத்தில் அல்லது மரண தண்டனையை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அளிக்கப்பட்ட சிறைத்தண்டனையை அனுபவித்து வருபவராயிருத்தல் அல்லது நேர்முற்போந்த ஏழு ஆண்டுக் காலத்தின்போது அத்தகைய தண்டனையை அனுபவித்து முடித்தவர்கள். கட்டற்ற மன்னிப்பு அளிக்கப்பட்டால் அத்தகைய தகுதியீனம் இல்லாதொழித்தல் வேண்டும்.
5. மக்கள் தீர்ப்பு, ஜனாதிபதி அல்லது பாராளுமன்ற தேர்தல் ஒன்றின்போது சட்ட விரோத மோசடி அல்லது ஊழல் நடவடிக்கைக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழாண்டுகள் கழியாதிருப்பவர்கள்.
6. இலஞ்சக் குற்றச்சாட்டு ஒன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஏழாண்டுகள் கழியாதிருப்பவர்கள்.
7. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் சட்டத்தின்கீழ் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு ஏழாண்டுகள் கழியாதிருப்பவர்கள்.
8. அரச நிறுவனம் ஒன்றில் ஊழல் நடவடிக்கையொன்றுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு 05 ஆண்டுகள் கழியாதிருப்பவர்கள்.
9. மக்கள் தீர்ப்பு, ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத் தேர்தல் ஒன்றின் போது சட்டவிரோத செயலுக்கு நேரொத்த ஒரு நடவடிக்கைக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கழியாதிருப்பவர்கள்.

10. பாராளுமன்றத்தில் குடியியல் தகுதியீனம் தொடர்பான பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டு அக்காலம் முடியாதிருப்பவர்கள்.

11. பொய்யான சான்று வழங்கள், தவறு ஒன்றின் தகவல்களை மறைத்தல், தவறு தொடர்பான தவறான தகவலை வழங்குதல், சான்றுக்த்கு தேவைப்படும் ஆவணம், பொருட்களை அழித்தல் போன்ற தவறு ஒன்றுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு ஆண்டுகள் கழியாதவர்கள்.

12. உயர்நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற அல்லது மேல் நீதிமன்ற அல்லது மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன் தோன்றாதோர், அதற்கான கட்டளையை மறுத்தல், கேட்கப்பட்ட வினாவுக்கு மறுமொழி வழங்காமை மற்றும் ஆணைக்குழுவினை அவமதித்தல் தவறொன்றுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு ஆண்டுகள் கழியாதிருப்பவர்கள்.

13. ஜனாதிபதியாக பதவி வகிக்கும் ஒருவர்.

14. நீதித்துறை அலுவலர்கள்.

15. நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்.

16. பாராளுமன்ற செயலாளர் நாயகம் அல்லது அவரின் பணியாட்டொகுதி உறுப்பினர்கள்.

17. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

18. தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்.

19. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

20. 1970.11.18ஆம் திகதி ஆரம்ப வருடாந்தப் ஏதேனும் ரூபா 6700 குறையாததாக அமைந்த பதவி வகிக்கும் அரச பணியாளர்கள்.

21. 1970.11.18ஆம் திகதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அரச பதவியில் 1970.11.18ஆம் திகதிஆரம்ப வேதனைம் ரூபா 6700 குறையாததாக அமைந்த அரசு அலுவலர்கள்.

22. 1970.11.18ஆம் திகதி ஆரம்ப வேதனம் ரூபா 7200 குறையாததாக அமைந்த அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்கள்.

23. முப்படையைச் சேர்ந்தவர்கள்.

24. பொலிசு உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் அல்லது அப்பணியை நிறைவேற்றும் பகிரங்க அலுவலர்கள்.

25. அரசின் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளவர்கள்.

26. வங்குரோத்தானவர் என அறிவிக்கப்பட்டுள்ளவர்கள்.

27. முற்போந்த ஏழாண்டு காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் இலஞ்சத்தை ஏற்றுள்ளாரென தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் அல்லது ஜனாதிபதி ஆணைக்குழுவினால் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.

28. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் வாக்களிக்க முடியாததோர்.

29. பாராளுமன்ற உறுப்பினர்கள்.

30. ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களில் நியமனப் பத்திரம் வழங்கியுள்ளோர்.

இதற்கு மேலதிகமாக 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினால் இரட்டை குடியுரிமை கொண்ட நபர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட தகுதியானவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நியமனப் பத்திரம் ஒப்படைத்தல்

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்கான அறிவித்தல் அல்லது தேர்தலொன்றை நடத்துமாறு விடுக்கப்பட்டுள்ள கட்டளையில் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கால எல்லை அறிவிக்கப்படும். அக்காலப்பகுதியானது இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்கள் கழிந்த நிலையில் தொடங்கி 14 நாட்கள் வரையான காலப்பகுதியாக அமையும். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டிய நியமனப் பத்திரங்கள் பின்வருமாறு தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சனாதிபதி தேர்தல் தொடர்பான நியமனப் பத்திரம் மூன்று முறைகளில் ஒப்படைக்கப்படலாம்:

1. நியமன பத்திரமானது உரிய படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2. குறித்த நிர்வாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையோடு மூன்றினை கூட்டி வரும் வேட்பாளர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. வேட்பாளர்கள் ஒப்பமிட்டிருத்தல் வேண்டும்.

4. அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ளவாறு சாத்தியம் அல்லது உறுதி மொழியில் ஒப்பமிடல் வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பை உறுதியாக போற்றி காப்பேன் என்றும், இலங்கையில் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவு அளிக்வோ, ஆக்கமளிக்கவோ, ஊக்குவிப்பு அளிக்கவோ, நிதி உதவவோ, ஊக்குவிக்கவோ, பரிந்துரைக்கவோ மாட்டேன் என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்து உறுதி செய்கிறேன் சத்தியம் செய்கிறேன்.

5. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியெனின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவராலும், சுயேச்சைக் குழுவெனின் பத்திரத்தில் முதலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவராலும் நியமன பத்திரத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

6. நியமன பாத்திரமானது சமாதான நீதவான் ஒருவரால் அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

7. நியமன பத்திரம் ஒன்றையும் அதன் பிரதி ஒன்றையும் மட்டுமே ஒப்படைத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியெனின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவராலும் சுயேச்சைக் குழுவெனின் பத்திரத்தில் முதலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவராலும் நியமன பத்திரம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். ஏதேனும் காரணத்திற்காக மேற்குறிப்பிட்டவரால் நியமனப் பத்திரத்தை ஒப்படைக்க முடியாதவிடத்து பாத்திரத்தில் இரண்டாவதாக பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளவரால் நியமன பத்திரம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

நியமனப் பத்திரமொன்று நிராகரிக்கப்பட்டால் தெரிவத்தாட்சி அலுவலர் நியமனப் பத்திரத்தை சமர்ப்பித்த நபருக்கு அதுகுறித்து தெரியப்படுத்த வேண்டும்.

தெரிவத்தாட்சி அலுவலர், அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நியமன பத்திரத்தினதும் ஒரு பிரதியை தன்னுடைய அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நியமனப் பத்திரத்தில் ஏதேனும் தவிர்வு அல்லது எழுத்துப் பிழை உள்ளதென தோன்றுகின்றவிடத்து நியமன காலப்பகுதி முடிவுறும் முன்னர் அதனை திருத்துவதற்கான விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம். அத்தகைய தவிர்வு அல்லது பிழை தற்செயலாக ஏற்பட்டதென தெரிவத்தாட்சி அலுவலர் திருப்திபடுமிடத்து தமது முன்னிலையில் திருத்துவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர் அனுமதிக்கலாம். ஏதேனும் காரணத்துக்காக நியமனப் பத்திரம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் பின்வரும் காரணங்களுக்காக எதிர்ப்பு தெரிவிக்கலாம். அத்தகைய எதிர்ப்பு எழுத்து மூலமானதாக இருக்க வேண்டும் என்பதுடன், அதில் எதிர்ப்பு தெரிவிப்பவர் ஒப்பமிடுதல் வேண்டும்.

1. வேட்பாளரை இனம் காண்பதற்காக வழங்கப்பட்டுள்ள தகவல்கள் போதுமானதாக இல்லாமை. .

   உதாரணம்- பெயர் முழுமையானதாக அல்லது நம்பிக்கை அற்றதாக காணப்படுதல்.

2. முழுமை பெறாத நியமனப் பத்திரத்தை ஒப்படைத்திருத்தல். (மேலே குறிப்பிடப்பட்டவாறு)

3. நியமனப் பத்திரத்தில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய உறுப்பினராவதற்கு தகுதியற்றவராக காணப்படல்.

4 சட்டவிரோத செயல் அல்லது ஊழல் நடவடிக்கை காரணமாக உறுப்பினராக தெரிவு செய்யப்பட முடியாமை அல்லது தேர்தல் மனு தொடர்பான வழக்குத் தீர்ப்பினால் உறுப்பினராக தகுதியற்றவராக காணப்படல். (அரசியல் அமைப்பின் 91 ஆவது உறுப்புரைக்கு இணங்க இவ்விடயம் சான்றுகளுடன் நிரூபிக்கப்படல் வேண்டும்.)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1, 2 மற்றும் மூன்றாவது விடயம் தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலருக்கு முடிவெடுக்கலாம். எனினும், 04வது விடயம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்த வேண்டும். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவு

இறுதியானதாக இருப்பதுடன் எதிர்ப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் உரிய நபரின்/ நபர்களின் வேட்பாளர் நிலை இரத்துச் செய்யப்படும்.

மேற்படி நான்காவது விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் காரணத்துக்காக குடியியல் தகுதியீனத்திற்கு ஆளான ஒருவர் தான் தகுதியற்றவர் என்பதை அறிந்த நிலையில் நியமனப் பத்திரத்தில் பெயரை உள்ளடக்கியிருப்பின் குற்றவாளியாக இனங்காண முடியும் என்பதுடன் அதற்கு 1000 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது மூன்று மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

## நியமன பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னரான செயற்பாடு

ஒரு நியமன பத்திரம் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் சம்பந்தப்பட்ட கட்சியின் செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவருடன் கலந்துரையாடி உறுப்பினர்கள் பெயர் குறித்து நியமிக்கப்படுவர். இரண்டு நியமனப் பத்திரங்கள் அல்லது அதிலும் கூடிய நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் அந்தந்த கட்சிக்குரிய சின்னத்தை ஒதுக்க வேண்டும். சுயேச்சைக் குழுக்கள் இருப்பின் அவற்றுக்கான சின்னங்களையும் ஒதுக்க வேண்டும். ஒரு கட்சிக்கென ஒதுக்கப்பட்ட சின்னத்தை எக்காரணத்திற்காகவும் வேறு ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு பெற்றுக்கொள்ள முடியாது. நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொரு பட்டியலிலுமுள்ள வேட்பாளர்களின் பெயர்களை சிங்கள அகரவரிசைப்படி தயாரித்தது அவர்களுக்கான தொடர் எண்களை வழங்க வேண்டும் சுயேச்சைக் குழுக்களுக்கும் உரிய எண்கள் வழங்கப்பட வேண்டும்.

முழு நோன்மதித் தினம் அல்லது அரசாங்கத்தின் விடுமுறை தினம் அல்லாத ஒரு நாளில் வாக்கெடுப்பை நடத்த வேண்டும். வாக்கெடுப்புக்கான அறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்கு குறையாததும் ஏழு வாரங்களுக்கு மேற்படாத காலத்தினுள் ஒரு திகதியை வாக்கெடுப்புத் தினமாக அறிவிக்க வேண்டும். அரசாங்கத்தின் விடுமுறை தினம் அல்லது முழுநோன்மதி தினத்தில் வாக்கெடுப்பை நடத்தக் கூடாது என்பதுடன், ஏதேனும் காரணமாக அரசாங்கத்தின் விடுமுறை தினம் வாக்கெடுப்புத் தினமாக அறிவிக்கப்படின் அத்திகதியில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அந்தந்த நிர்வாக மாவட்டத்தின் வாக்கெடுப்பு மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்குமான வாக்கெடுப்பு நிலையம் அல்லது வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பான அறிவித்தல் ஒன்றை வர்த்தமானியில் வெளியிட வேண்டும். விசேட நிலைமை காரணமாக வாக்காளர்களுக்கு பிரத்தியேகமான ஒரு வாக்கெடுப்பு நிலையம் அமைக்கப்படாவிடின் தேர்தல் தொகுதி ஒன்றில் ஒரு வாக்கெடுப்பு நிலையத்தை மட்டுமே அமைக்க முடியும். விசேட சந்தர்ப்பங்களில் தேர்தல் தொகுதிக்கு வெளியே வாக்கெடுப்பு நிலையத்தை அமைக்கும் அதிகாரம் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அதிகாரம் உண்டு. (உதாரணம் - விசேட நிலைமை காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்காக)

நியமனப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட திகதிக்கும் வாக்கெடுப்பு நடத்தப்படும் திகதிக்கும் இடையில் வேட்பாளர் ஒருவர் மரணித்தால் அதன் காரணமாக அவரின் பெயர்

உள்ளடக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல் இரத்து செய்யப்படுவோ புதிதாக நியமன பத்திரமொன்று ஒப்படைக்கப்படவோ மாட்டாது. ஏனென்றால், மேலதிகமாக மூவரின் பெயர்கள் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் ஏதேனும் நிர்வாக மாவட்டத்தில் வாக்கெடுப்பை உரிய திகதியில் நடத்த முடியாவிடின் வர்த்தமான பத்திரிகையில் வெளியிடும் அறிவித்தல் ஒன்றின் மூலம் அந்த நிர்வாக மாவட்டத்திற்காக வாக்கெடுப்பை நடத்த ஒரு திகதியை அறிவிக்கலாம். அத்திகதியானது வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்கு இடைப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும்.

தெரிவத்தாட்சி அலுவலரினால் வாக்காளர் ஒவ்வொருவருக்குமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு 14 நாட்களுக்கு முன்னர் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அந்த அட்டையில் பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

1. நிர்வாக மாவட்டத்தின் பெயர்.

2. வாக்காளரின் பெயர், முகவரி, பதிவிலக்கம்.

   (வாக்காளர் இடாப்பு இலக்கம்)

3. தேர்தல் மாவட்டமும் வாக்கெடுப்பு நிலையமும்.

4. வாக்கெடுப்பு திகதி மற்றும் நேரம்.

## வாக்கெடுப்பு தின நடைமுறை

### 1. முக்கிய பணிகள்

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்குச்சீட்டுகள், உத்தியோகபூர்வ இலச்சினை, சின்னம் மற்றும் வாக்காளர் இடாப்பின் பிரதிகளை வாக்கெடுப்பு நிலைய முகவர்களுக்கு காண்பித்தல் வேண்டும். வாக்குப் பெட்டிகள் வெறுமையாக இருப்பதையும் காண்பிக்க வேண்டும். புதிய வாக்குப்பெட்டியொன்று பயன்படுத்தப்படும் எல்லா சந்தர்ப்பத்திலும் இவ்வாறு செய்ய வேண்டும். வாக்கெடுப்பு நிலையம் ஒவ்வொன்றிலும் பின்வரும் வசதிகள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

- ❖ வாக்காளர் இடாப்பு
- ❖ தபால் வாக்காளர்களின் பட்டியல்
- ❖ வாக்காளர் வாக்குச்சீட்டில் குறியீடு செய்வதற்கான சூழல் மற்றும் உபகரணங்கள். (மூன்று பக்கங்களும் மறைக்கப்பட்ட அரை மற்றும் போதிய வெளிச்சம்)
- ❖ பாதுகாப்பு ஏற்பாடுகள்
- ❖ தேர்தல் சட்டத்திற்கு இணங்க அவசியமான ஏணைய வசதிகள்

வாக்கெடுப்பு தொடங்குமுன்னர் வாக்காளர்களின் வசதி கருதி சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் பின்வரும் அறிவித்தல்களை காட்சிப்படுத்த தேர்தல் அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ❖ வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் கட்சிக்கு / குழுவுக்கு ஒதுக்கப்பட்ட சின்னம் மற்றும் இலக்கம்.
- ❖ வாக்காளர்களுக்கு வழிகாட்டும் அறிவுறுத்தல்கள் மற்றும் மாதிரி வாக்குச் சீட்டு.

## 2. வாக்கெடுப்பை ஆரம்பித்தல்

வாக்கெடுப்பு தினத்தில் முற்பகல் 07 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். வாக்காளர்கள் அடையாள வெளிப்படுத்துகை ஒன்றைச் செய்ய வேண்டும். 2004ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் மற்றும் தேர்தல் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட வர்த்தமான பத்திரிகைக்கு இணங்க ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைக்குப் பதிலாக பின்வரும் ஆவணங்களைப் பயன்படுத்தலாம்.

- உதவித் தேர்தல் ஆணையாளரின் அங்கீகாரத்துடன் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை
- முதியோர் அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- ஓய்வு பெருநருக்கான அடையாள அட்டை
- மதகுருமார்களுக்கான அடையாள அட்டை
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

## வாக்குச்சீட்டு கொடுக்கப்படுவதற்கு உடன்முன்னதாக

தேருநர் இடாப்பின் பிரதியில் கூறப்பட்டவாறான வாக்காளரின் இலக்கமும், பெயரும் விவரணமும் கூப்பிடப்படுதல் வேண்டும். வாக்காளரின் இலக்கமானது அடியிதழ்த்தாளிற் குறிக்கப்பட்டு அதிலிருந்து வாக்குச்சீட்டு கிழிக்கப்படுதல் வேண்டும். வாக்குச்சீட்டானது அலுவலக முறையான குறியீடு ஒன்றில் பொறிக்கப்பட்டோ, பதிக்கப்பட்டோ, அல்லது துளையிட்டோ இருத்தல் வேண்டும். வாக்காளர் வாக்குச்சீட்டொன்றைப் பெற்றுள்ளாரென்பதைக் குறிப்பதற்காக, அவருக்குக் கிடைத்த குறிப்பான வாக்குச்சீட்டைக் காண்பியாது. வாக்காளரின் பெயருக்கெதிரே இடாப்பில் குறியீடொன்று இடப்படுதல் வேண்டும்.

மேலும், வாக்காளரின் இடதுகையின் சிறுவிரல் அல்லது அத்தகைய விரல் இல்லாவிடின், அவரது வலது கையின் வேறேதேனும் விரல் அல்லது அவரது இடது கையில் எல்லா விரல்களுமில்லாவிடின் அவரது வலது கையின் சிறுவிரல் அல்லது அத்தகைய விரல் இல்லாவிடின், அவரது வலது கையின் வேறேதேனும் விரல் அல்லது அவரது இடது கையிலும் வலது கையிலும் எல்லா விரல்களும் இல்லாவிடின், அத்தகைய வாக்காளருக்குரிய

அவரது இடது அல்லது வலது கையின் அத்தகைய நுனியில் தோதான குறயீட்டை இடவேண்டும்.

வாக்காளர் தோதான குறியீடு இடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது. தோதான குறியீட்டை இட மறுக்கும் எவருக்கும் வாக்குச் சீட்டை வழங்கக்கூடாது என்பதுடன் ஒரு வாக்காளர் வாக்களிக்கும் விதத்தை தெளிவுபடுத்துமாறு கோரினால் அதை நிறைவேற்ற வேண்டும். தலைமை தாங்கும் அலுவலர் அதாவது தேர்தல் அலுவலர் அதைச் செய்யும்போது வாக்கெடுப்பு நிலையத்தில் பிரசன்னமாகியிருக்கும் ஏனையோர் கேட்கக்கூடியவாறு தெளிவுபடுத்த வேண்டும். அங்கவீனமுற்றோர் அல்லது பார்வைத்திறன் அற்றோரின் வாக்குகளை அவர்களுக்கு தேவையான விதத்தில் அளிக்கும்போது தேர்தல் அலுவலர் ஒருவரின் முன்னிலையில் வாக்குச்சீட்டில் குறியீடு இடவேண்டும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் அவதானமாக இருக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு மாறாக நிகழும்போது வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் அது தொடர்பில் தலைமை தாங்கும் அலுவலருக்கு முறைப்பாடு செய்து தாமும் அதைப் பதிவு செய்து கொள்ள முடியும்.

வாக்காளர் ஒருவரின் பெயர் வாக்காளர் இடாப்பில் காணப்படுமாயின் அவருக்கு வாக்குச்சீட்டு ஒன்றை கோருவதற்கான முழு உரிமை உண்டு. தலைமை தாங்கும் அலுவலரினால் பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே வாக்காளருக்கான வாக்குச் சீட்டை வழங்காதிருக்க முடியும்.

- ❖ ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தவறுதல்.
- ❖ வாக்காளர் ஒருவரின் சிறு விரலில் அழியாதவாறு தோதான குறியீடு இடப்பட்டுள்ளதா என்பதை சோதனையிடுவதற்கு தலைமை தாங்கும் அலுவலர் அல்லது அவரின் பிரதிநிதிக்கு அனுமதி மரத்தல்.
- ❖ அவ்வாறு சோதனை செய்வதன் மூலம் தோதான குறியீடு உள்ளமை கண்டறியப்படுதல்.
- ❖ அழியாதவாறு தோதான குறியீட்டை சிறு விரலில் இட அனுமதி மறுத்தல்.

ஒரு வாக்காளர் தமக்கு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டை தவறுதலாக உரிய முறையில் பயன்படுத்த தவறினால் அதனை தலைமை தாங்கும் அலுவலரிடம் ஒப்படைத்து அதற்குப் பதிலாக மேலும் ஒரு வாக்குச் சீட்டை பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு கோரும்போது அவரது பெயரில் வேறு ஒருவருக்கு வாக்குச்சீட்டு வழங்கப்பட்டிருந்தால், அதனை ஒரு கூற்றாக பதிவுசெய்துகொண்ட பின்னர் கேட்டுப் பெறும் வாக்கு சீட்டை வழங்கமுடியும். எனினும், விசேட நிலைமை தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் அது எண்ணப்படமாட்டாது

## 3. வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்

தேர்தல் தினத்தன்று முகவராக நியமிக்கப்படும் கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதனைப் பின்வரும் நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் :

- ❖ அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் செயலாளர், அல்லது செயலாளரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி, சுயேட்சைக் குழுவாயின், அதன் தலைவர்.

❖ அநந்நியமனக் கடிதத்தில் முகவரின் பெயர், முகவரி, இனம், அடையாள அட்டையின் இலக்கம் என்பன குறிப்பிடப்பட வேண்டும். அத்தோடு, அடையாள அட்டையையும் எடுத்துச் செல்ல வேண்டும்.

❖ நியமனக் கடிதம் விநியோகிப்பதற்கு அதிகாரமுள்ள நபர் தொடர்பில் தேர்தல் தினத்திற்கு 07 நாட்கள் முன்னதாக தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

❖ வாக்கெடுப்பு நிலைய முகவரின் நியமனத்தை இரத்துச்செய்து புதிய முகவரைத் தெரிவு செய்யும்போது மேற்கூறப்பட்ட விபரங்களை உள்ளடக்கியதாக அதனை எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

❖ ஒரு கட்சி அல்லது குழு சார்பாக இரண்டுக்கும் மேற்பட்ட முகவர்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கியிருக்க முடியாது.

தலைமைதாங்கும் அலுவலருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கியிருக்க அதிகாரம் பெற்றவர்களைத் தவிர ஏனையவர்கள் வெளியேற்றப்படலாம். ஆகையால், வேறு நபர்கள் உட்பிரவேசிக்கும்போது வெளியே செல்லுமாறு தெரிவிக்கலாம்.

## 4. தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் முகவர்களின் கடமைகளும் பொறுப்புகளும்.

வாக்கெடுப்பு நிலையத்தில் அல்லது வாக்கெண்ணும் நிலையத்தில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அலுவலர்கள், முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள், எழுதுநர்கள், வேட்பாளர்கள், முகவர்கள் ஆகியோர் ஓர் இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகையைச் செய்தல் வேண்டும்.

❖ இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதுடன், அதனைப் பாதுகாக்கவும் அவர்கள் உதவ வேண்டும்.

❖ வாக்காளர் ஒருவரின் பெயர் அல்லது இலக்கம் அல்லது பதவி முத்திரை பற்றி சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறு அன்றி, எவருக்கும் தெரிவிக்கப்படலாகாது.

❖ வாக்களிக்கும் அல்லது வாக்களித்துள்ள கட்சியை அல்லது குழுவை அல்லது வாக்குச் சீட்டின் பின் புறத்தில் உள்ள இலக்கத்தை தெரிவித்தலாகாது.

வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்குமுன்னர் வாக்காளருடன் கதைக்கலாகாது. இவற்றின் கீழ் குற்றவாளியாகக் காணப்படின், ரூ. 500 தண்டப் பணம் அல்லது 6 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். 07 ஆண்டுகளுக்கு குடியுரிமை பறிக்கப்படும்.

பின்வருவோர் மாத்திரமே வாக்கெடுப்பு நிலையத்தில் பிரவேசிக்கலாம்.

- பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள்.

- வாக்கெடுப்பு நிலையத்திற்கு அவசியமான பணியாட்கள்.
- அங்கு கடமையில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள்.
- கள நடவடிக்கைகளுக்காக வருகை தரும் தெரிவத்தாட்சி அலுவலர்கள்.
- ஆளடையாள அட்டையுடன், நியமனக் கடிதத்தைக் கைவசம் வைத்திருக்கும் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்.
- வேட்பாளர்கள் (ஒரு தடவைக்கு ஒருவர் மாத்திரமே நிலையத்தினுள் இருக்க முடியும்).
- போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்/சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள்.
- ஏற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்பு நிறுவனங்கள்

மேலே சொல்லப்பட்டவர்கள் அல்லாத ஏனையவர்கள் அங்கு உட்பிரவேசிப்பது தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.

## 5. வாக்கெடுப்பை நிறைவு செய்தல்

முற்பகல் 07 மணிக்கு ஆரம்பிக்கப்படும் வாக்கெடுப்பை பிற்பகல் 04 மணிக்கு நிறைவு செய்ய வேண்டும். அதாவது, வாக்குச்சீட்டுகள் வழங்கப்படுவதை நிறுத்தவேண்டும். ஒவ்வொரு தலைமை தாங்கும் அலுவலரும் வாக்கெடுப்பு முடிந்ததை உடனடுத்து வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் முன்னிலையில் அவர்களின் இலச்சினை, வேட்பாளர் அல்லது அவர்களது முகவர்களின் இலச்சினையை அவர்கள் விரும்பின் பின்வருவனவற்றில் இடவேண்டும்.

- பயன்படுத்தப்படாத மற்றும் பழுதான வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய கட்டு.
- வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டு அடியிதழ்கள்.
- கேட்டுப்பெறும் வாக்குச் சீட்டுக்கள்.
- வாக்குச்சீட்டு விநியோகிக்கப்படாத நபர்களின் பெயர் பட்டியல்.

தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்கு பெட்டிகளில் தமது இலச்சினையை இட விரும்பும் வேட்பாளர்கள் அல்லது அவர்களுடைய முகவரிகளின் இலச்சினையை இட்டு சரியான முறையில் மூடி தெரிவத்தாட்சி அலுவலருக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்படும்போது பின்வரும் விபரங்கள் அடங்கிய கூற்று ஒன்றும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படும்.

- ❖ பழுதான வாக்குச்சீட்டுகள் தவிர்ந்த வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குச்சீட்டுகளின் அடியிதழ்கள்.
- ❖ பழுதான வாக்குச்சீட்டுகள்
- ❖ பயன்படுத்தப்படாத வாக்குச்சீட்டுகள்.

## 6. வாக்கெடுப்பு நிலையமொன்றிலன் வாக்கெடுப்பை வறிதாக்குவதில் தாக்கம் செலுத்தும் விடயங்கள்

- வாக்கெடுப்பு நிலையத்தை காலை 07 மணிக்கு திறக்காமை.
- வாக்கெடுப்பை மாலை 04 மணிக்கு முடிவுக்கு கொண்டு வராமை.
- அனைத்து வாக்குப் பெட்டிகளையும் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வாக்கெண்ணும் நிலையத்திற்கு உரிய முறைப்படி கொண்டு செல்லாமை.
- சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரினால் கட்டுப்படுத்த முடியாது ஏதேனும் விடயம் காரணமாக வாக்கெடுப்பை நடத்த முடியாமை.
- வாக்கெடுப்பு நடத்தப்படும் காலத்தினுள் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் அச்சுறுத்தப்படல், தாக்கப்படல் அல்லது வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து விரட்டியடிக்கப்படல்.
- வாக்கெடுப்பை நடத்த முடியாதவாறு வாக்களிப்பு நிலையத்தில் அமைதி சீர்குலைதல்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் தேர்தல் ஆணையாளரினால் பின்வரும் உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் வர்த்தமான அறிவித்தலொன்று வெளியிடப்படும். ஏதேனும் காரணமாக வாக்கெடுப்பு நிலையமொன்றின் வாக்கெடுப்பை இரத்துச்செய்தால் மீண்டும் அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்கான வாக்கெடுப்பை மீண்டும் நடத்தாலாம்.

- சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்.
- தெரிவத்தாட்சி அலுவலர் / உதவி தெரிவத்தாட்சி அலுவலர்.
- வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்.
- சுயாதீன தேர்தல் அவதானிப்பாளர்கள்.

## 7. வாக்கெண்ணல்.

தெரிவத்தாட்சி அலுவலரினால் வாக்கெண்ணும் நிலையத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலிருந்தும் எல்லா வாக்கு பெட்டிகளும் கிடைத்த பின்னர் உடனடியாக வாக்கெண்ணத் தொடங்க வேண்டும். வாக்கணும் நேரத்தையும் இடத்தையும் வேட்பாளர்களுக்கும் அவர்களுடைய முகவர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். வாக்கெண்ணும்போது வாக்குச் சீட்டின் முகப்புப் பக்கமாக அதன் இலக்கம் தெரியக் கூடியவாறு வைக்கவேண்டும். நிராகரிக்கப்படும் வாக்குச் சீட்டுகளில் “நிராகரிக்கப்பட்டது” என்ற புறக் குறிப்பை இடவேண்டும். வாக்கு எண்ணும் போது வாக்கெண்ணும் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட அவதானிப்பாளர்கள் மட்டுமே அங்கு பிரசன்னமாகியிருக்க முடியும். வாக்கெண்ணும் முகவர்கள் வாக்குப் பெட்டிகள் சரியாகவும், வாக்கெண்ணும் பணிகள் சரியாகவும் நடைபெறுகின்றனவா என்பதை அவதானித்து அவ்வாறு இல்லாவிடின் அதுபற்றி தலைமை தாங்கும் அலுவலருக்கு முறைப்பாடு செய்யலாம்.

வாக்குச்சீட்டுகள் கட்டுகளாக கட்டப்படும் போது அவை 50 அல்லது 500 வாக்குச்சீட்டுகள் கொண்ட கட்டுகளாக கட்டப்படுகின்றனவா என்பதை முகவர்கள் அவதானிக்க வேண்டும். ஒரு

வாக்குச் சீட்டு இலச்சினை இடப்படாது அல்லது துளையிடப்பட்டாதிருப்பின் அது நிராகரிக்கப்படும். வாக்குச் சீடடொன்று நிராகரிக்கப்படுவதற்கு முன்னர் முகவரிடம் அதுகுறித்து வினவப்படும். அதேபோல், நிராகரிக்கப்படும் வாக்குச்சீட்டுகளின் விபரம் அடங்கிய ஒரு கூற்று தயாரிக்கப்படும். தேவையெனின் முகவர் அதன் பிரதியை வைத்துக்கொள்ளலாம்.

ஒவ்வொரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பான ஒரு கூற்று தயாரிக்கப்படும். அவ்வாறு தயாரிக்கப்படும் கூற்றில் முகவர் கையொப்பமிட வேண்டும் என்பதுடன் அதன் பிரதியொன்றையும் பெற்றுக்கொள்ளமுடியும். அதிகபட்சமாக இரண்டு தடவைகள் வாக்குகள் எண்ணப்படலாம். வாக்குச்சீட்டு தொடர்பில் வாக்கெண்ணும் அலுவலர் முடிவு இறுதியானது.

**வாக்கெண்ணும் போது பின்வரும் வாக்குச் சீட்டுகள் நிராகரிக்கப்படலாம்.**

1. அதிகாரபூர்வ சின்னம் இல்லாத வாக்குச்சீட்டுகள்.
2. அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுக்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வாக்களித்துள்ள வாக்குச்சீட்டுகள்.
3. ஒன்றுக்கும் மேற்பட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு வாக்களித்துள்ள வாக்குச்சீட்டுகள்.
4. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் இரண்டு அல்லது அதிலும் கூடிய எண்ணிக்கைக்கு வாக்களித்துள்ள வாக்குச்சீட்டுகள்.
5. முகப்புப் பக்கத்தில் காணப்படும் இலக்கம் தவிர்ந்த வாக்காளரின் அடையாளத்தை கண்டறியக் கூடிய வகையில் ஏதும் எழுதப்பட்ட வாக்குச்சீட்டுகள்.
6. குறியீடு செய்யப்படாத வாக்குச்சீட்டுகள்.
7. வாக்களித்துள்ள அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு தொடர்பில் நம்பிக்கையற்ற தன்மை காணப்படுவதால் செல்லுபடியற்றதாக கருதப்படும் வாக்குச்சீட்டுகள்.

## 8. வாக்கெண்ணும் நிலைய முகவர்கள்

கட்சியின் செயலாளர், அதிகாரம் பெற்ற முகவர் அல்லது குழுத் தலைவர் ஆகியோரினால் வாக்கு எண்ணும் நிலைய முகவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

- ஒரு நிலையத்தில் வாக்குகளை எண்ணும் இடங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவையாக அமைந்திருக்குமாயின் 05 பேரும்,
- ஒரு வாக்கு எண்ணும் இடம் மாத்திரம் அமைந்திருக்குமாயின், 02 பேரும் வாக்குகளை எண்ணும் முகவர்களாக நியமிக்கப்பட முடியும்.

வாக்குகளை எண்ணும் முகவர்களின் பெயர், முகவரி என்பன முற்கூட்டியே வாக்குகளை எண்ணும் அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். வாக்குகளை எண்ணும் சந்தர்ப்பத்தில் தேசிய அடையாள அட்டை மற்றும் நியமனக் கடிதம் என்பவற்றுடன் அங்கு

செல்ல வேண்டும். அவற்றைக் கைவசம் வைத்திருக்காவிடின், உட்செல்ல அனுமதி மறுக்கப்படலாம்.

## 9. வாக்களிப்பதற்கான லீவு

ஒரு வாக்களார் வாக்களிக்கச் செல்வதற்காக எழுத்து மூலம் லீவு கோரும்போது 04 மணி நேரத்திற்கும் குறையாத தொடர்ச்சியான ஒரு காலத்தை சம்பளத்துடனான லீவாக வழங்க ஒவ்வொரு தொழில் தருனரும் கடப்பாடுகொண்டுள்ளனர்.

## தேர்தல் தவறுகள்

1981ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய மூன்று தவறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

- ❖ தேர்தல் தவறுகள் (சட்டப் பிரிவு 66 - 76)
- ❖ ஊழல் நடவடிக்கைகள் (சட்டப் பிரிவு 77 - 82)
- ❖ சுட்டமுரணான பழக்கங்கள் (சட்டப் பிரிவு 83 -90)

### தேர்தல் தவறுகள்

### 1. தேர்தலுக்கு முன்னரான தவறுகள்

பிரிவு 66 -

- ஏதேனும் நியமனப் பத்திரத்தை போலியாகப் புனைதல், மோசடியாக உருவழித்தல், வாக்குச்சீட்டிலுள்ள அலுவலக முறையான குறியீட்டை போலியாக புனைதல், பொய்யாகப் புனைதல், மோசடியாக உருவழித்தல் அல்லது மோசடியாக வாக்குச் சீட்டின் உத்தியோகபூர்வ இலச்சினையை மோசடியாக அழித்தல்.
- உரிய அதிகாரமின்றி வாக்குச் சீட்டுக்களை விநியோகித்தல், வாக்குச் சீட்டுக்களை விற்றல் அல்லது கொள்வனவு செய்தல். அலுவலக குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டை அதிகாரமின்றி உடைமையில் வைத்திருத்தல, அவ்வாறான வாக்குச் சீட்டொன்றை வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே கொண்டு செல்லல்.
- குறியிடப்பட்ட வாக்குச்சீட்டொன்றை வாக்கெடுப்பு நிலையத்தில் வேண்டுமென்று வெளிக்காட்டுதலி, வாக்குச் சீட்டு தவிர்ந்த வேறு எதனையும் வாக்குப் பெட்டிக்குள் இடுதல்.
- வாக்குச்சீட்டுப் பெட்டியை அல்லது வாக்குச்சீட்டுக்களின் பொதியை முறையான அதிகாரமின்றி அழித்தல், திறத்தல் அல்லது வேறு வகையில் அவற்றுடன் சம்பந்தப்படுத்தல்.
- தேர்தல் ஒன்றின்போது முறையான அதிகாரம் இன்ற வாக்குச் சீட்டுக்களை அச்சிடல்.

- ஒரு தேர்தல் காலப்பகுதியில் வாக்குச்சீட்டுப்பெட்டியினுள் இடப்பட்ட வாக்குச்சீட்டொன்றை குடைந்து வெளியே எடுப்பதற்கான உபகரணங்களை தயாரித்தல் இறக்குமதி செய்தல் அல்லது வழங்குதல.

- தபால்மூல வாக்காளர் அவரது அடையாளம் பற்றிய வெளிப்படுத்துகையில் வேண்டுமென்றே பொய்யான கூற்றொன்றை வழங்குதல்.

- தபால் வாக்காளருக்கு அனுப்பப்படும் கடிதமேலுறை, வாக்குச்சீட்டு உறை எதனையும் முறையான அதிகாரமின்றி அழித்தல் அல்லது திறத்தல் அல்லது அதனுடன் எதனையும் சேர்த்தல்.

- முறையான அதிகாரமின்றி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை அச்சிடுதல், வாக்கெடுப்பு நடைபெறும்போது வாக்காளர் தவறாகப் புரிந்துகொள்ளத் தக்க ஒரு குறியீட்டை அல்லது வேறு யாதேனும் ஒன்றை இடுதல்.

மேற்படி தவறுகள் தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் நடத்தப்படும் வழக்கு விசாரணையின் பின்னர் ஒருவர் குற்றவாளியாக இனங்காணப்படின், இரண்டு வருட கால இருவகையிலொரு சிறைத் தண்டனைக்கு ஆளாகலாம். மேலும், ஏழு ஆண்டுகளுக்கு குடியுரிமை பறிக்கப்படலாம். அவ்வாறான ஒருவர் மக்கள் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தால் அவர் உறுப்பினர் பதவியை இழக்க நேரிடும்.

## 2. தேர்தல் தினத்தன்று தடுக்கப்பட்ட செயல்கள்

**பிரிவு 68 -**

வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பு நடைபெறம் வேளையில், குறித்த இடத்திலிருந்து அரை கிலோ மற்றர் வரையான எல்லையினுள் பின்வரும் செயல்களைப் புரிவது தவறாகும்.

- ❖ வாக்களிக்குமாறு வாக்காளர்களைக் கோருதல்.
- ❖ குறிப்பான வாக்காளர் ஒருவரின் வாக்கைக் கோருதல்.
- ❖ வாக்களிக்க வேண்டாமென கூறுதல், பகிரங்கமாக கூறுதல், குறிப்பான ஒரு கட்சிக்கு அல்லது ஒரு குழுவுக்குச் சார்பாக வாக்களிக்க வேண்டாம் என வாக்காளர் ஒருவரைத் தூண்டுதல்.
- ❖ வாக்கெடுப்புடன் தொடர்பான (ஓர் உத்தியோகபூர்வ ஆவணம் அல்லாத) ஒரு துண்டுப்பிரசுரம், சுவரொட்டி, அறிவித்தல், ஓவியம், நிழற்படம் அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு அல்லது ஒரு குழுவுக்கு உரிய இலச்சினையை விநியோகித்தல் அல்லது காட்சிப்படுத்தல்.
- ❖ வாக்கெடுப்பு நிலைய எல்லையினுள் வாக்கெடுப்பு நிலையத்தை நோக்கி வருவோருக்கு, கடமையில் ஈடுபட்டிருக்கும் அலுவர்களுக்கு அல்லது ஏனையோரின் நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும் விதத்தில் ஒலிபெருக்கிக் கருவிகளை உபயோகித்தல், உரத்துப் பேசுதல் / சத்தமிடல், ஒழுங்கீனமாக நடந்துகொள்ளல்

**தண்டனை :** நீதவான் நீதிமன்றத்தின் சுருக்க முறை விசாரணை ஒன்றின் பின்னர் தவறு நிரூபிக்கப்படின், ரூ. 100 தண்டப் பணம் அல்லது 06 மாத கால சிறைத் தண்டனை அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம்.

## 3. ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்களை நடாத்துதல்

**பிரிவு 69 -**

தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்யும் திகதியிலிருந்து முடிவுகள் வெளியாகி ஒரு வார காலம் கழியும் வரையில் உர்வலங்களை ஏற்பாடு செய்தல், அவற்றை வழி நடாத்துதல் அல்லது அவற்றில் கலந்துகொள்ளல் ஆகியன தடை செய்யப்பட்டுள்ளன. தேர்தலுக்குப் பக்கபலமாக அமையும் விதத்தில் மதம், சமூகம் சார்ந்த பணிகளுக்காக ஊர்வலங்களை நடாத்த முடியும். இந்த விதிகள் மீறப்படுமாயின் ஒரு மாத கால சிறைத் தண்டனை அல்லது ரூ.100 தண்டப் பணம் அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம்.

**பிரிவு 70 -**

தேர்தல் நடைபெற இரு தினங்களுக்கு முன்னர் (48 மணி நேரத்திற்கு முன்னர்) தொடங்கி, தேர்தல் பெறுபேறுகள் வெளியாகி ஒரு வார காலம் கழியும் வரையில் பொதுக் கூட்டங்களை நடாத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கு இரண்டு மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது ரூ.100 தண்டப் பணம் விதிக்கப்படலாம்.

**பிரிவு 71**

மேற்போந்த தவறுகளைப் புரிவதற்காக எத்தனிப்பதும் ஒரு குற்றமாகும். மேலே சொல்லப்பட்ட தவறுகளுக்காக பிடியாணை இன்றி கைதுசெய்யப்படலாம். எனினும், 66, 67, 68, 69 மற்றும் 70 ஆகிய பிரிவுகளின் கீழ் புரியும் தவறுகளுக்காக வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நீதவான் நீதிமன்றில் குற்றவாளியாக இனங்காணப்பட்டால் அதற்குத் தண்டனையாக 100 ரூபா அல்லது இரண்டு மாத கால சிறைத் தண்டனை அல்லது அவ்விரண்டும் விதிக்கப்படலாம்.

## 4. தேர்தல் அலுவலகங்கள்

**பிரிவு 73 -**

வேட்புமனுத் தாக்கல் செய்த நாள் தொடங்கி வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு முந்திய நாள் வரையில் அலுவலகம் இயங்க முடியும். கிளை அலுவலகங்கள் முதற்கொண்டு அதாவது, வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய நாளில் தொடங்கி வாக்கெடுப்பு தினத்திற்கு மறுநாள் வரையில் இயங்கலாம்.

- ❖ குறித்த தொகுதியின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் அல்லது குழுத் தலைவர் ஒருவருக்கு ஒரு தேர்தல் அலுவலகத்தையும், ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்குமான கிளை அலுவலகம் ஒன்றையும் நடாத்திச் செல்லலாம். (பிரிவு 73 – 1(அ))

- ❖ ஒவ்வொரு வேட்பாளருக்கும் தலா ஒரு கிளை அலுவலகத்தை நடத்திச் செல்லலாம். (பிரிவு 73 – 1(அ))

- ❖ குழுவின் தலைலர் அல்லது வேட்பாளரின் வீட்டை தேர்தல் அலுவலகமாக நடத்திச் செல்ல முடியும். (பிரிவு 73 – 2 (ஆ)). இத்தகைய அலுவலகங்கள் தொடர்பில் பிரதேசத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (பிரிவு 73 – 6 (அ)). இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கு. வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

## 5. துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், அறிவித்தல்கள், ஓவியங்கள், நிழற்படங்கள், இலச்சினைகளைக் காண்பித்தல்.

**பிரிவு 74**

நியமன காலப்பகுதியின் முதலாம் நாள் அன்று தொடங்கி வாக்கெடுப்பு நடைபெறும் நாளுக்கு அடுத்துவரும் நாள் வரை வேட்பாளர் ஒருவரின் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனத்தில் அல்லது வாகனத்தின் மீது தவிர, ஏனைய பொதுவிடங்களில் ஏதேனும் கொடியை அல்லது பதாகையை, துண்டு பிரசுரத்தை அல்லது சுவரொட்டியை காட்சிப்படுத்தல் தவறாகும்.

வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு திரட்டும் முகமாக எந்த வளவில் எந்த நாளில் கூட்டம் நடத்தப்படுகிறதோ அது தவிர்ந்த

- ❖ பொதுமக்கள் சென்றடைவதற்கு உரிமை கொண்டுள்ள அல்லது அவர்கள் சென்றடைவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இடத்திலும் ஏதேனும் துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை, சுவரொட்டியை, சித்திரத்தை, அறிவித்தலை வேட்பாளருக்குரிய புகைப்படத்தை சின்னத்தை அல்லது அடையாளத்தை காட்சிப்படுத்தக் கூடாது.

- ❖ பொது வீதி எதன்மீதும் அல்லது அதற்கு குறுக்காக ஏதேனும் துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை, சுவரொட்டியை, சித்திரத்தை, அறிவித்தலை, வேட்பாளருக்குரிய புகைப்படத்தை, சின்னத்தை, அடையாளத்தை, கொடியை அல்லது பதாகையை காட்சிப்படுத்தக் கூடாது.

- ❖ ஏதேனும் பொது அல்லது தனிப்பட்ட இடத்தில் கொடியை அல்லது பதாகையை காட்சிப்படுத்தக் கூடாது.

இந்த ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் நீதவான் ஒருவர் முன்னிலையில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் 100 ரூபாயை விஞ்சாத ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத காலத்திற்கான இரு வகையிலொரு வகை சிறைத்தண்டனை அல்லது அத்தகைய குற்றப் பணம் சிறைத் தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும். மேலும, அத்தகைய ஒருவரை பிடியாணையின்றியும் கைது செய்யலாம். பொலிசார்

இத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்காக அதிகாரத்தை பிரயோகிப்பதற்கான விண்ணப்பத்தைன நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்க முடிவதுடன், அதன்மூலம் அத்தகைய சட்டவிரோத அறிவித்தல்கள், பதாகைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை அகற்ற முடியும்.

### பிரிவு 75

நியமனக் காலப்பகுதியின் முதலாம் நாள் அன்று தொடங்கி வாக்கெடுப்பு நடைபெறும் நாளுக்கு அடுத்துவரும் நாள் வரை எவரேனும் வேட்பாளர் அல்லது வேட்பாளர் ஒருவரின் குடும்பத்தின் உறுப்பினர், வாழ்க்கைத் துணை, மகன், மகள் அல்லது பெற்றோர் அல்லது வேட்பாளர் ஒருவரின் மகன் அல்லது மகளின் வாழ்க்கை துணை பின்வருவனவற்றைச் செய்தல் தவறாகும். வாக்காளர் ஒருவரின் வாக்கை பரிந்து கேட்கும் நோக்கத்துடன் வதிவிடம் ஒன்றுக்குச் செல்லுதல், ஏதேனும் கட்சிக்கு அல்லது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டாமென வசப்படுத்த முயலுதல், ஏதேனும் துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை, சுவரொட்டியை, சித்திரத்தை, அறிவித்தலை, வேட்பாளருக்குரிய புகைப்படத்தை சின்னத்தை அல்லது அடையாளத்தை விநியோகித்தல் அல்லது காட்சிப்படுத்துதல். இந்த ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் நீதவான் ஒருவர் முன்னிலையில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் 100 ரூபாயை விஞ்சாத ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத காலத்திற்கான இரு வகையிலொரு வகை சிறைத்தண்டனை அல்லது அத்தகைய குற்றப் பணம் சிறைத் தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

### பிரிவு 67

குடியியல் தகுதியீனம் விதிக்கப்பட்ட அத்துடன் அத்தகைய ஆட்களுக்காக வாக்களிக்குமாறு இரந்து கேட்டல், அவர் சார்பாக பேசுதல், அவரின் முகவராக செயல்படுதல் தவறாகும். இந்த ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் நீதவான் ஒருவர் முன்னிலையில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் 100 ரூபாயை விஞ்சாத ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது 06 மாத காலத்திற்கு மேற்படாத காலத்திற்கான இரு வகையிலொரு வகை சிறைத்தண்டனை அல்லது அத்தகைய குற்றப் பணம் சிறைத் தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

## 6. இரகசியத் தன்மை

### பிரிவு 76

வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு அல்லது வாக்கெண்ணும் நிலையத்திற்கு சமுகமளிக்க அதிகாரம் பெற்ற அலுவலர்கள், எழுதுனர்கள், முகவர்கள் வேட்பாளர்கள் ஆகியோர் உரிய இரகசிம் பேணுவதற்கான வெளிப்படுத்தல் ஒன்றில் ஒப்பமிட வேண்டும்.

**இரகசியம் பேணலுக்கான வெளிப்படுத்துகைப் படிவம்**

> எனக்கு வாசித்துக் காட்டப்பட்ட, 1981 ஆண்டின் 01 இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 76 பிரிவினால் தடை செய்யப்பட்டுள்ள எதனையும் ..........................தேர்தல் மாவட்டத்திற்கான இத்தேர்தலில் செய்ய மாட்டேன் என நான் பயபக்தியுடன் வாக்குறுதி செய்து வெளிப்படுத்துகிறேன்.

அதன் படி பின்வரும் செயல்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

- ❖ வாக்கு தொடர்பான இரகசியத் தன்மையைப் பேண உதவ வேண்டும் என்பதுடன், வாக்குச் சீட்டொன்றுக்கான விண்ணப்பித்துள்ள அல்லது வாக்காளர் ஒருவரின் பெயர், இலக்கம் அல்லது உத்தியோகபூர்வ இலச்சினை பற்றிய யாதேனும் ஒரு தகவலை வாக்கெடுப்பு பூர்த்தியடையும் முன்னர் பகிரங்கப்படுத்தல்.
- ❖ ஒரு வாக்காளர் யாருக்கு வாக்களித்துள்ளார் அல்லது வாக்குச் சீட்டின் பின்புறத்தில் உள்ள இலக்கம் தொடர்பான ஒரு தகவலை யாதேனும் ஒருவருக்குத் தெரிவித்தல்.
- ❖ வாக்குச்சீட்டு ஒன்றின் மூலம் வாக்களித்துள்ள கட்சி அல்லது குழு பற்றிய தகவல்களை யாதேனும் ஒருவருக்குத் தெரிவித்தல்.
- ❖ ஒரு வாக்காளர் வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியினுள் இடுவதற்கு முன்னர் வாக்காளருடன் கதைத்தல். இவ்வகையான குற்றங்களுக்குக் ரூ. 500 தண்டப் பணம் அல்லது 06 மாத கால சிறைத் தண்டனை அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம் என்பதுடன் குடியியல் தகுதியீனம் செய்யப்படலாம்.

## ஊழல் பழக்கங்கள்

### 1. ஆள் மாறாட்டம்

**பிரிவு 77**

உயிர் வாழும் அல்லது மரணித்த ஒருவர் சார்பாக தனிப்பட்ட முறையில் அல்லது தபால் மூலம் வாக்களிப்பதும், தமது பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வாக்களிப்பதும் ஆள்மாறாட்டமாகும். .

இதற்காக, வாக்களித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. வாக்குச் சாவடி ஒன்றில் வாக்களிப்பதற்காக வாக்குச் சீட்டொன்றைக் கோருவதன் மூலமும், தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிப்பதன் மூலமும், தபால்மூல வாக்குச் சீட்டொன்றின் புள்ளடி இடுவதன் மூலமும் இந்தக் குற்றச் செயல் பூரணத்துவம் பெறும். இதற்காக பிடியாணையின்றி கைதுசெய்யப்படலாம்.

### 2. உபசரணைகள்

**பிரிவு 78**

தேல்தலுக்கு முன்னர் அல்லது தேர்தலுக்குப் பின்னர் அல்லது அதனிடையயே வாக்களிக்கவோ வாக்களிக்காமல் இருப்பதற்கோ உபசரணைகளை மேற்கொள்வது தவறாகும். சட்டமா அதிபர் கடந்த காலத்தில் இதுபோன்ற பல சம்பவங்களுக்கு எதிராக வழக்குத் தொடர அதிகாரம் வழங்கியுள்ளார். ஒருவரின் வாக்கைப் பெற்றுக்கொள்ளல் அல்லது வாக்களிக்காமல் இருப்பதன் பொருட்டு உபசரணை செய்தல் அதில் அடங்கும்.

- ❖ நேரடியாக அல்லது பிறிதொரு வகையில் உணவுப் பொருட்கள், பானங்கள் அல்லது வேறு உண்டிகளை வழங்குதல் அல்லது வினியோகித்தல்.
- ❖ அத்தகையவற்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அனுமதிச் சீட்டொன்றை அல்லது வேறு நுட்பமுறை ஒன்றைக் கையாளல்.

- ❖ அத்தகையவற்றை வழங்குவதற்காக ஏற்படும் செலவை ஈடுசெய்வதாக வாக்குறுதியளிததல்.
- ❖ அத்தகைய உபசரணை ஒன்றை வழங்கல் அல்லது வினியோகித்தல் போன்றே. அதனைப் பெற்றுக்கொள்ளல் அல்லது பெறுவதற்கான நுட்பமுறை ஒன்றைக் கையாளல் ஆகியனவும் உபசரணை சார்ந்த தவறாகும்.

## 3. முறைகேடான செல்வாக்கு

**பிரிவு 79**

முறைகேடான செல்வாக்கு என்பது வாக்குரிமையைச் சுதந்திரமாகப் பிரயோகிப்பதற்கு அல்லது அவ்வாறு பிரயோகிக்காமல் இருப்பதற்கு இடையூறாக அமைதல் அல்லது தூண்டவதாகும். தேர்தலொன்றில் வாக்களக்க அல்லது வாக்களிக்காமல் இருப்பதற்குத் தூண்டுவதன் காரணமாக நேரடியாக அல்லது பிறிதொரு வகையில் முறைகேடான செல்வாக்குகள் பிரயோகிக்கப்படலாம். தம்மால் அல்லது வேறொருவர் மூலம் ஒருவருக்கு அல்லது அவர் சார்பாக வேறொருவருக்கு முறைகேடான செல்வாக்கு பிரயோகிக்கப்படலாம். செல்வாக்கு, ஏமாற்று, இடையூறு அச்சுறுத்தல் நேரடியாக அல்லது பிறிதொருவர் மூலமாக மேற்கொள்ளப்படலாம். இத்தகைய செல்வாக்குகளின் பௌதிக அல்லது உளத்தாக்கம், இழப்பு, சேதம், சாபம் ஏற்படும் என அச்சுறுத்துவது, கடத்திச் செல்வதாக உணர்த்துவதன் மூலம் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு இடையூறு விளைவிக்கப்படுகின்றது.

வேட்புமனுத் தாக்கல் செய்த தினத்திலிருந்து வாக்கெடுப்பு தினத்திற்கு பிந்திய நாள் வரையிலான் காலத்தில் ஏதேனும் கட்சிக்கு அல்லது குழுவிற்கு வாக்களிப்பதற்காக அல்லது வாக்களிக்காமல் இருப்பதற்காகத் தூண்டுதல் அளிக்குமாறு மத சார்பான கூட்டமொன்றில் தெரிவித்தல், அத்தகைய மத சார்பான கூட்டமொன்றில் தேர்தல் பிரசாரங்கள், அறிவித்தல்கள், ஓவியங்கள், நிழற்படங்கள், கொடிகள் ஆகியவற்றைப் பகிர்ந்தளித்தல் அல்லது காண்பித்தல், தேர்தலில் போட்டியிடும் ஒரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு ஆதரவாக புனிதத் தலமொன்றில் பொதுக்கூட்டமொன்றை நடாத்துதல் ஆகியன முறைகேடான செல்வாக்கைப் பிரயோகிப்பதாகும். தேர்தலின் பேரில் மத அனுட்டானங்களை செய்யாதிருப்போமென அச்சுறுத்தல் விடுத்தல் அல்லது அந்த மத அமைப்பிலிருந்து வெளியேற்றுவதாக அச்சுறுத்தல் விடுத்தல் முறைகேடான செல்வாக்காகும்.

ஒரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு வாக்களித்தல் அல்லது வாக்களிக்காமை பொருட்டு அல்லது வாக்களித்திருத்தல் அல்லது வாக்களிக்காமல் இருத்தல் காரணமாக தொழில் கொள்வோர்.

- தொழிலை இழக்கச் செய்தல் அவ்வாறு செய்வதாக அச்சுறுத்தல்.
- தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது அனுபவித்த அன்றேல் அனுபவிப்பதற்குள்ள நன்மைகள் அல்லது சேவைப் புறக்கணிப்பு அல்லது அவ்வாறு செய்வதாக அச்சுறுத்தல்.

## 4. இலஞ்சம

**பிரிவு 80**

- வாக்களிப்பதற்காக அல்லது வாக்களிக்காமல் இருப்பதற்காக வாக்காளர் ஒருவரைத் தூண்டும் பொருட்டு வழங்கப்படும் ஒரு “கொடுப்பனவாகும்” அது மறைமுகமாக வழங்கப்படும் ஒன்றாகவும் இருக்கலாம். வாக்களார் சார்பாக மற்றைய ஒருவருக்கு வழங்கப்படுவதாகவும் இருக்கலாம்.
- அவ்வாறு வழங்கப்படும் தொகை, கடனாகவோ அல்லது வேறு ஏதேனும் ஒன்றாகவோ இருக்கலாம். அவ்வாறு வழங்குவதற்கு வாக்குறுதி அளிப்பதும், வழங்குவதற்கு முயற்சிப்பதாக வாக்குறுதி அளிப்பதும் இலஞ்சம் வழங்குவதாகும்.
- வாக்களித்திருப்பதன் காரணமாக அல்லது வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்திருப்பது பற்றிய மேலே சொல்லப்பட்டவாறான ஒரு செயலைப் புரிவதும் குற்றத்திற்குப் போதுமானதாகும்.
- அவ்வாறு வழங்கப்படுபவை, வழங்க வாக்குறுதி அளிக்கப்படுபவை ஒரு பதவி, நியமனம், தொழிலாக அமையலாம். வாக்களித்ததன் காரணமாக அல்லது வாக்களிக்காமை காரணமாக அவ்வாறு புரிவதும் ஓர் இலஞ்சம் சார்ந்த தவறாகும்.
- அவ்வாறு வழங்கப்படுபவை (நேரடியாகவோ மறைமுகமாகவோ) ஒரு பரிசாக, கடனாக, ஆலோசனையாக, வாக்குறுதி அளிப்பதாக, ஒப்பந்தமொன்றின் மூலமாகவும் தவறு இழைக்கப்படலாம். அதன்படி, வாக்களிப்பதும், வாக்களிப்பதாக வாக்குறுதி அளிப்பதும் தவறாகும்.

இலஞ்சம் பெறும் வாக்காளரும் தவறாளியாவார். தேர்தலுக்கு முன்னர் அல்லது வாக்கெடுப்பு நடைபெறும்போது அவ்வாறு யாதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளவது, அதற்காக இணங்குவது, உடன்பாட்டுக்கு வருவது ஆகியவற்றின் மூலம் வேட்பாளரும் இலஞ்சம் பெறும் தவறை இழைக்கின்றார். மேலே விபரிக்கப்பட்டவாறு இலஞ்சத்தை தாமாகவோ பிறிதொருவர் மூலமாகவோ நேரடியாகவோ மறைமுகமாகவோ வேண்டி நிற்வரும் இலஞ்சம் பெறும் தவறுக்கு ஆளாவார். மேலே குறிப்பிட்டவாறு இலஞ்சம் வழங்க அல்ல வழங்குவதற்கு முயற்சிப்பதாக வாக்குறுதி அளிக்கும் நபரும் இலஞ்சம் வழங்கும் தவறை இழைக்கின்றார்.

## 5. ஊழல் நடவடிக்கைகளுடன் தொடர்பான தண்டனைகள்

ஆள் மாறாட்டத்திற்கு உடந்தையாக இருத்தல், உபசரணை மேற்கொள்ளல், முறைகேடான செல்வாக்கைப் பிரயோகித்தல், இலஞ்சம் வழங்கல், நற்பெயருக்குக் களங்கம் விளைவித்தல், வேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதிலிருந்து கேட்டு விலகி விட்டதாகப் பொய்யுரைத்தல், தேர்தல் ஊழல் நடவடிக்கைகள் தொடர்பில் தண்டிக்கப்படக் காரணமாக அமையலாம். கள்ள வாக்குப் போடுவோருக்கான தண்டனை : ரூ. 500 தண்டப் பணம் அல்லது 12 மாத கால கடுழியச் சிறைத் தண்டனையாகும். மற்றைய தவறுகளுக்கு ரூ. 500 அல்லது 06 மாத கால சிறைத் தண்டனை இருவகையிலாவொரு தண்டனை விதிக்கப்படலாம். .

- இது தொடர்பான வழக்கு விசாரணைகள் மேல் நீதிமன்றத்திலேயே இடம்பெறும்.
- வழக்குத் தொடர சட்டமா அதிபரின் அங்கீகாரம் அவசியமாகும்.

- ❖ குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் மற்றைய தண்டனைகளுக்குப் புறம்பாக 07 ஆண்டு காலத்திற்கு குடியுரிமை நீக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராயின், அந்தப் பதவியையும் இழக்க நேரிடும்.
- ❖ வேட்பாளர் ஒருவரின் முகவர் இத்தவறுகளைப் புரிந்திருப்பாராயின் அவருடைய வேட்பாளர் தண்டனைக்கு ஆளாவதுடன் குடியுரிமை இழக்க நேரிடும்.

## சட்டவிரோதச் செயல்கள்

### 1. கொடுப்பனவுகள் மற்றும் வாக்காளர்களை எற்றிச் செல்லல்

**பிரிவு 83**

தேர்தல் ஒன்றின்போது மேற்கொள்ளப்படும் சில கொடுப்பனவுகள் அல்லது செலவினங்கள் சட்ட விரோதச் செயலாகக் கருதப்படும்.

- ❖ வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து அல்லது வாக்களிக்கும் இடத்திற்கு வாக்காளர்களை ஏற்றிச் செல்வதற்காக எவ்வகையிலும் பிரயாணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் அல்லது அதனை வழங்க உடன்படல் சட்ட விரோதமானது.
- ❖ பிரசுரங்கள், விளம்பரங்கள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்த அல்லது காட்சிப்படுத்து வதற்காக ஓர் இடத்தைப் பயன்படுத்துவதற்காக வாக்காளர் ஒருவருக்குக் கொடுப்பனவு ஒன்றை மேற்கொள்வதும், அவ்வாறு வழங்க உடன்படுவதும் சட்ட விரோதமானது. .
- ❖ தேர்தலுக்கு முன்னர் அல்லது தேர்தலின் பின்னர் அல்லது அதனிடையே கொடுப்பனவொன்றை வழங்கல் அல்லது வழங்க உடன்படல், கொடுப்பனவொன்றைப் பெறுவதும், உடன்படிக்கையொன்றில் தரப்பினராவதும் குற்றமாகும்.
- ❖ வாக்கெடுப்புக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பிருந்து. வாக்கெடுப்பு முடிவடைந்து ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் வரையான காலத்தில் வாக்கெடுப்பு நிலையத்திற்கு அல்லது அந்த இடத்திலிருந்து வாக்காளர்களைக் கொண்டு செல்வதற்காக உதவியும் உடந்தையும் அளிக்கப்படல் ஆகாது. சட்ட ரீதியான ஒரு நடவடிக்கையை அல்லது ஓர் உத்தியோகபூர்வ நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

மேற்போந்த செயல்கள் சட்ட விரோதமாக அமையாத சந்தர்ப்பங்கள் வருமாறு:

- ❖ ஒரு வாக்காளர் தனது தொழில் முயற்சியின் பேரில் கட்டணம் அறவிட்டு பத்திரங்களையும், விளம்பர அறிவித்தல்களையும் அச்சிடுவது சட்ட விரோதமானதாக அமையாது.

- ❖ ஓர் ஆற்றை அல்லது கடலைக் கடந்து செல்லாமல் வாக்களிக்க முடியாதுள்ள ஒரு சூழ்நிலையில் வாக்காளர்கள் ஆற்றை அல்லது கடலைக் கடக்க உதவுதல். .
- ❖ பொதுப் போக்குவரத்துச் சேவையின் மூலம் தமது சொந்தச் செலவில் வாக்குச் சாவடிக்குச் செல்வதும், வருவதும் சட்ட விரோதமான செயலன்று.
- ❖ வாக்கெடுப்புத் தினத்திற்கு 07 நாட்களுக்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட எழுத்து மூல அனுமதியுடன் அங்கவீனமுற்ற ஒருவர் வாக்குச் சாவடிக்குச் சென்று திரும்ப போக்குவரத்து வசதியை ஏற்பாடு செய்துகொள்ளலாம். (வாக்காளர் ஒருவர் சார்பாக வேட்பாளர் ஒருவரால் அத்தகைய எழுத்து மூல அனுமதி கோரப்படல் ஆகாது.
- ❖ சட்ட விரோதமான முறையில் ஆட்களைக் ஏற்றிச் செல்லும்போது, தமது வழிநடத்தலினால் அல்லது முறைப்பாட்டின் பேரில் பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு அந்த வாகனத்தைப் பொறுப்பேற்று வாக்கெடுப்பு முடிவடையும் வரையில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருக்கலாம்.
- ❖ சட்டவிரோதமான ஒரு செயல் தொடர்பில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால், குறித்த செயலுக்காகப் பயன்படுத்திய வாகனத்தை அரசுடைமை ஆக்குவதற்கு மேல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

## 2. பொய்ப் பிரசாரம் மேற்கொள்ளல்

### பிரிவு 84

ஒரு செய்தித்தாள், சஞ்சிகை, பத்திரிகை அல்லது வெளியீட்டின் மூலம் பொய்யான ஒரு செய்தியைப் புனைந்து வெளியிடுவது இதன் பொருளாகும். அத்தகைய பொய்ப் பிரசாரம், குறித்த தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சி அல்லது குழுவின் வேட்பாளர் ஒருவரின் தேர்தல் உரை அல்லது நடவடிக்கைகள் தொடர்பானதாக இருத்தல் வேண்டும். அத்தகைய பொய்ப் பிரசாரம் தேர்தல் முடிவில் தாக்கமொன்றை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக இருத்தல் வேண்டும். அத்தகைய ஒரு பிரசாரத்தை மேற்கொள்ளும் பிரசுரத்தின் உரிமையாளர், முகாமையாளர், ஆசிரியர், வெளியீட்டாளர் அல்லது எழுத்தாளர் ஆகியோர் அந்தச் செயல் தொடர்பில் பொறுப்புக் கூறக் கடப்பாடுடையவராவார். ஒவ்வொரு தனிநபரும் இதற்குப் பொறுப்புக்கூறுதல் அவசியமற்றது. தேவையான விடயங்களை நிரூபிப்பதன் மூலம் அந்தப் பொறுப்பிலிருந்து விடுபடலாம்.

## 3. கொடுப்பனவு செலுத்தி தேர்தல் கடமையில் அமர்த்துதல்

### பிரிவு 85

ஒரு வேட்பாளருக்கு தாம் சார்பாக தேர்தலொன்றில் தேவை கருதி குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆட்களை வேலைக்கமர்த்த சட்டத்தால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வாக்கெண்ணும் முகவர்கள் எழுதுநர்கள், தூதேவளாட்கள் ஆகியோரை அவ்வாறு பணிக்கு அமர்த்தலாம். நியாயமான எண்ணிக்கையை விஞ்சி அத்தகையவர்களைப் பணிக்கு அமர்த்துவது சட்ட விரோதமானது.

## 4. அச்சு வெளியீடுகளில் பெயர் குறிப்பிடுதல் ஆகாது

### பிரிவு 86

தேர்தலொன்றைக் குறிப்பீடு செய்யும் விளம்பரத்தை, துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை அல்லது சுவரொட்டியை வெளியிட்டவரின் அல்லது அச்சிட்டவரின் பெயர் மற்றும் முகவரி இன்றி அத்தகைய வெளியீடுகளை ஒட்டுமாறு அல்லது அச்சிடுமாறு வற்புறுத்தல், பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யும் வேட்பாளர் அல்லது அவரின் முகவர் சட்ட விரோத செயலுக்கு தவறாளியாவர். இச்செயலுக்கு குற்றத்தீர்ப்பளிக்கபட்டால் 5000 ரூபா தண்டப் பணம் விதிக்கப்படும். இச்செயல் தவறுதலாக அல்லது நல்லெண்ணத்துடன் புரிந்துள்ளமை நிரூபிக்கப்பட்டால் தண்டனையிலிருந்து விடுபட முடியும் என்பதுடன், நீதவான் முன்னிலையில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் ரூபா 500 குற்றப் பணத்திற்கு ஆளாக்க முடியும்.

## 5. சட்டவிரோத செயல்களுக்கான தண்டனை

மேல்நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டால் ரூ. 300 தண்டப் பணம் அறவிடப்படும். அத்துடன் அன்று தொடக்கம் 03 வருட காலத்திற்கு குடியுரிமையை இழக்க நேரிடலாம். இவ்விதமான சட்ட விரோத செயல்கள் தொடர்பில் வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

## தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் தேர்தல் தவறுகள்

இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் ix அ அத்தியாயத்தின் 169 அ தொடக்கம் 169 ஏ வரையான பிரிவுகளில் தேர்தல் தவறுகளும் அவற்றுக்கான தண்டனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அச்சட்டத்திற்கு இணங்க,

1. வாக்களிக்குமாறு தூண்டும் பொருட்டு பணம் கொடுத்தல். வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிக்காமல் இருப்பதற்கு தூண்டும் வகையில் வெகுமதியாக பணத்தை பெற்றுக்கொள்ளுதல், இலஞ்சம் வழங்குதல், இலஞ்சம் கொடுத்தல் என்பன இதில் அடங்கும். இவ்வாறான தவறொன்றுக்கு நீதவான் முன்னிலையில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டால் 500 'ரூபாய்க்கு மேற்படாத தண்டப்பணம் விதிக்கப்படும்.

2. சுதந்திரமாக வாக்களிப்பதற்கு வேண்டுமென்றே இடையூறு செய்யும் அல்லது தடையை ஏற்படுத்த முயல்கின்ற ஒருவர் தகாத செல்வாக்கைப் பிரயோகிக்கும் தவறைச் செய்கிறார். அதாவது வாக்காளருக்கு ஏதேனும் நட்டத்தை அச்சுறுத்தலை அல்லது தான் அக்கறை கொண்டுள்ள ஒருவர் மத ரீதியான குற்றச்சாட்டுக்கு அல்லது கடவுளின் கோபத்திற்கு ஆளாக முடியுமென ஒரு வாக்காளர் எண்ணக் கூடிய வகையில் வேட்பாளர் நடந்துகொள்வதை இது குறிக்கின்றது. அதாவது, தவறான மனப்பாங்கு, வதந்திகளைப் பரப்புதல் இதில் அடங்கும். இவ்வாறான தவறொன்றுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டால் 500 ரூபாவுக்கு மேற்படாத ஒரு தொகை தண்டப்பணமாக விதிக்கப்படும்.

3. வாக்கெடுப்பின் போது உயிருடன் இருக்கின்ற அல்லது இறந்த ஒருவரின் பெயரில் வாக்குச் சீட்டைக் கோருதல், அப்பெயரில் வாக்களித்தல் அல்லது அவ்வாறான செயல் ஒன்றுக்கு உடந்தையாக இருத்தல் அல்லது அவ்வாறான செயலைப் புரிய எத்தனித்தல் வேறு ஒருவர் சார்பாக தோன்றுவதாகும். இவ்வாறான தவறொன்றுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டால் 300 ரூபாவுக்கு மேற்படாத ஒரு தொகை தண்டப்பணமாக விதிக்கப்படும்.

## தேர்தலில் அரச ஆதனங்களை தவறாகப் பயன்படுத்துதல்

அமைச்சுகள், அரச கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் உட்பட அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல அசையும் அசையா சொத்துகள் பொதுச் சொத்துகள் என அறியப்படுகின்றன. அரசாங்கத்தின் கட்டடங்கள், வாகனங்கள் பொதுமக்களின் பணம் மற்றும் அரச நிறுவனத்தின் பொறுப்பிலுள்ள வேறு பொருட்கள் இதில் அடங்கும். தேர்தலொன்றின்போது இவ்வாறான சொத்துகளை ஏதேனும் கட்சி அல்லது குழுவின் வேட்பாளர் தனது அரசியல் நடவடிக்கைக்காக பயன்படுத்துதல் பாரதூரமான தேர்தல் சட்ட மீறலாக கருதப்படும்.

அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின் கீழ் அரச ஆதனம் தேர்தலின்போது வேட்பாளர் ஒருவரின் அல்லது ஒரு குழுவின் அல்லது கட்சி ஒன்றை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தப்படுவதை தடுக்கும் அதிகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின்படி அதன் தலைவர் அல்லது ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1982ஆம் ஆண்டின்12 ஆம் இலக்க பகிரங்க ஆதனத்திற்கெதிரான தவறுகள் சட்டத்தின்கீழ் ஏதேனும் அரச ஆதனமொன்றை தனிப்பட்ட நடவடிக்கைக்காக பயன்படுத்துதல் அவ்வாதனத்தை தவறாகப் பயன்படுத்தல் என்று பொருள்படும். இத்தகைய செயல் ஓராண்டு தொடக்கம் 20 ஆண்டு வரையான சிறைத் தண்டனைக்குரிய குற்றவியல் தவறாக கருதப்படும்.

அரச பணியாளர் ஒருவர் அரச ஆனைமொன்றை தன்னுடைய அல்லது வேறு ஒருவரின் தனிப்பட்ட நலனுக்காக பயன்படுத்துவதாயின், அது 1994 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க திருத்தப்பட்வாறான இலஞ்சச் சட்டத்தின் 70ஆவது பிரிவுக்கு அமைய மோசடி என்ற தவறில் அடங்கும். அதன்படி அரச பணியாளர்கள் தமது பொறுப்பில் அல்லது கட்டுக்காப்பில் இருக்கின்ற அரச அதனங்களை அரசியல் பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த அனுமதித்தல் பாரதூரமான தவறாகும்.